**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 100/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.5 |
| Name : | திரு. கலியமூர்த்தி |
| Father's Name/Husband Name: | திரு. சின்னசாமி |
| Village : | வெண்கலம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 45/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 20.11.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 4 ஆஜர் இல்லை கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி 2 மற்றும் 3 இறந்தார்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஜெயசீலியை தெரியும். எதிரிகளை தெரியாது. அ.சா.1 எதற்காக புகார் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. போலிசாரிடம் சாட்சி கையொப்பம் எதுவும் போடவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு போலிசார் விசாரணைக்காக எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் அருகே வந்தனர். போலிசார் படம் வரைவதாகவும், அதற்கு சாட்சி கையொப்பம் போடுமாறும் கேட்டனர். போலிசார் என்ன செய்தனர் என்ற விவரம் எனக்கு தெரியாது. **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ4 ஆகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தனர் என்றும், கடந்த 20.04.2013 அன்று மதியம் 3 மணியளவில் என் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர் என்றும், அந்த பார்வை மகஜரில் நான் சாட்சி கையொப்பமிட்டேன் என்றும் அதற்கு ஆதரவாக நான் வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல. கடந்த 20.04.2013 அன்று மதியம் 3.30 மணியளவில் போலிசார் சம்பவயிடத்திலிருந்து சுமார் 5-3/4 அடி நீளமுள்ள மரக்குச்சி ஒன்றும் அதில் இணைக்கப்பட்ட ஒரு அடி உள்ள குத்துக் கோள் ஒன்றை கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றினார் என்றும் அதற்கு ஆதரவாக நான் வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதன்பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.